**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044383

1. District மாவட்டம் : பெரம்பலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு – பெரம்பலூர் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 07 Date: நாள் 01.10.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act – 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: 7, 7A
 (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
 (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
 (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 30.09.2021
 Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.45 Time to : நேரம் வரை 23.45
 (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 Time : நேரம் 13.30
 (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 20 KM, தென்மேற்கு
 Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், செட்டிகுளம், பெரம்பலூர் மாவட்டம்.
 (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஆ. கருணாகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் ஆறுமுகம்
 (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
 Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
 (f) Occupation : தொழில் உதவி தணிக்கை உதவியாளர் (g) Address : மாவட்ட ஆட்சியரகம், பெரம்பலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
 தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
 1) திரு. விஜயன், சார்பதிவாளர், செட்டிகுளம்.
 2) திரு. இளங்கோவன், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம் செட்டிகுளம்,
 3) திரு. ராஜ்குமார், (தனியார்), த/பெ. வீரராகவன். M.M. நகர், பெரம்பலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
 குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
 — தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 01.10.2021-ம் தேதி மதியம் சுமார் 13.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது A.கருணாகரன், வயது 50/2021, த/பெ ஆறுமுகம், துணை வட்டாட்சியர்/உ.சூர் தலைமை உதவியாளர், 'H' பிரிவு, மாவட்ட ஆட்சியரகம் பெரம்பலூர் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர், A.கருணாகரன், வயது 50/2021, த/பெ ஆறுமுகம், துணை வட்டாட்சியர்/உ.சூர் தலைமை உதவியாளர், 'H' பிரிவு, மாவட்ட ஆட்சியரகம் பெரம்பலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அம்மா, பொருள் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தது - சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஏஜெண்ட் மீது நடவடிக்கை எடுக்க கோருதல்- தொடர்பாக. நான் 30.09.2021-ம் தேதி 12.30 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அலுவலகத்திற்கு 14.00 மணிக்கு சென்று அங்கிருந்த காவல் ஆய்வாளர் திருமதி.சுலோச்சனா அவர்களை

(Separate sheet enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 01/10/2021

[signature] 01/10/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P-SULOCHANA
Rank: நிலை Inspector No. எண் ..........
V&AC, Perambalur.

**பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 07/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

சந்தித்தபோது, அவர் பெரம்பலூர் மாவட்டம், செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, நகல், வில்லங்கம் மற்றும் திருமண பதிவு போன்ற வேலைகளுக்கு வரும் பொது மக்களிடம் நேரடியாகவும் பத்திர எழுத்தர்கள் மூலமும் தனி நபர் மூலமும் சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் கையூட்டு பெறுவதாகவும் இன்று ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர் மொத்தமாக பத்திர பதிவு செய்ய வருவதாகவும் அவரிடம் கையூட்டு பெற்று கொண்டு பத்திரபதிவு செய்ய இருப்பதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய கேட்டுக்கொண்டதன் பேரில் அங்கிருந்து அரசு வாகனத்தில் ஆய்வாளர் திருமதி.சுலோச்சனா மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு பெரம்பலூரிலிருந்து சுமார் 20 கிலோமீட்டர் தென்மேற்கு திசையில் உள்ள பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் சென்று ஆலத்தூர் - பெரம்பலூர் சாலை சந்திப்பின் வடகிழக்கில அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே பெரம்பலூர் மற்றும் ஆலத்தூர் ரோட்டின் இரு பக்கங்களிலும் லஞ்ச ஒழிப்பு குழுவினருடன் ஆங்காங்கே நின்று பத்திர பதிவு அலுவலகத்திற்கு செல்லும் நபர்களை கவனித்துக்கொண்டு இருந்த போது மாலை சுமார் 16.30 மணிக்கு பெரம்பலூர் ரோட்டுக்கு மேற்கு பக்கம் பெயர் பலகை எதுவும் வைக்கப்படாமல் இருந்த பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு முன்னால் ஒரு நபர் அவருடன் வேறு இரண்டு மூன்று நபர்களும் சேர்ந்து நின்று கொண்டிருந்தார்கள். தொடர்ந்து அந்த தனி நபர் மூன்று கத்தையாக வைத்திருந்த பண நோட்டுக்களை எண்ணி பார்த்து விட்டு அதில் ஒரு கத்தையை அவரது சட்டை பாக்கெட்டில் வைத்து விட்டு மீதி பணத்தை அவருக்கு எதிரே சார்பதிவாளர் அலுவலக காம்பவுண்ட் சுவர் ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN-46-Y-1531 Maruti Ertiga Car-ல் வைத்து விட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றார். அவரை தொடர்ந்து நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை குழுவினருடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்த போது அலுவலக வாசலில் இருந்து வெளியே வருவதற்காக வந்த நபரை யார் என்று விசாரித்த போது அவர் அலுவலக உதவியாளர் இளங்கோவன் என்று கூறியதால் அவரை அலுவலகத்திற்கு உள்ளே போக சொல்லி விட்டு என்னையும் விஜிலென்ஸ் குழுவினரையும் அங்கிருந்த சார்பதிவாளரிடம் அறிமுகப்படுத்திக் கொண்ட போது அலுவலக ஹாலில் நின்றுகொண்டிருந்த அலுவலக உதவியாளர் ஹாலின் கிழக்கு பக்கமிருந்த கணினி அறைக்குள்ளே சென்று கணினி அறையின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள திறந்திருந்த ஜன்னல் வழியாக அவர் அணிந்திருந்த நீல நிற ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து வெளியே வீசினார். உடனே அவரை அழைத்து கொண்டு வெளியே சென்று ஜன்னலின் வெளியே தரையில் சிதறி கிடந்த 10, 50, 100, 200 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிப்பார்த்ததில் அதில் ரூ.3,250/- இருந்தது. அந்த பணம் மற்றும் எதற்காக வீசினீர்கள் என்று விசாரித்ததற்கு தான் வீட்டிலிருந்து செலவிற்காக ரூ.760/- கொண்டு வந்ததாகவும், அதனை அலுவலக பணியாளர்கள் பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும், டீ குடிக்க ரூ.10/- செலவழித்துவிட்டு மீதி ரூ.750/- வைத்திருந்தாகவும், அது சொந்த பணம் என்றும் மீதமுள்ள ரூ.2,500/- இன்று பத்திர பதிவுக்கு வந்த நபர்கள் அவர்களாகவே 100, 200 என்று கொடுத்தது என்றும் தணிக்கை

குழுவினரை பார்த்ததும் பயத்தில் தூக்கி வீசியதாகவும் கூறினார். ரூ.750/- அவரது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள ரூ.2,500/- வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின் போது சார்பதிவாளர் திரு.விஜயன், இளநிலை உதவியாளர்கள் செல்வி.சூர்யா, செல்வி.பிரியவர்த்தினி, அலுவலக உதவியாளர் திரு.இளங்கோவன், Data Entry Operator திருமதி.கீதா மற்றும் Camera Operator திரு.கோபி ஆகியோர்கள் இருந்தார்கள். கோபி இருக்கைக்கு கிழக்கில் இருந்த டேபிளுடன் கூடிய இருக்கையில் மேற்குறிப்பிட்ட Ertiga காரிலிருந்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே வந்த நபர் அமர்ந்திருந்தார். இவர்களை தவிர பார்வையாளர் அறையிலும், சார்பதிவாளர் இருந்த Hall-லிலும் தனி நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மேற்படி அலுவலர்கள் மற்றும் தனி நபர்களை சோதனை செய்து விசாரித்ததில் சார்பதிவாளர் திரு.அ.விஜயன் என்பவரிடம் ரூ.500-ம், இளநிலை உதவியாளர்கள் செல்வி.சூர்யாவிடம் ரூ.140-ம், செல்வி.பிரியவர்த்தினியிடம் ரூ.27-ம் Data Entry operator திருமதி.கீதாவிடம் ரூ.190-ம் Camera Operator திரு.கோபியிடம் ரூ.210-ம் இருந்தது. அந்த பணம் பற்றி கேட்டதற்கு சார்பதிவாளர் அது குறித்து அலுவலக பணியாளர்கள் பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும், அப்பணத்தை செலவு ஏதும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மற்ற அலுவலர்களை விசாரிக்க அவர்கள் வீட்டிலிருந்து செலவிற்காக கொண்டு வந்த பணம் என்றும், அது குறித்து அலுவலக பணியாளர்கள் பணக் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும், அத்தொகையில் செலவு செய்தது போக மீதமுள்ள பணம் என்று சொன்னதால் அந்த பணத்தினை அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. Ertiga காரிலிருந்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே வந்து கேமரா பொருத்தப்படாத கணினி அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் வீ.ராஜ்குமார், வயது 53, த/பெ வீரராகவரெட்டியார், MM நகர் பெரம்பலூர் வடக்கு என்ற முகவரியில் வசிப்பதாகவும், தான் ITI படித்து விட்டு Real Estate தொழில் செய்து வருவதாகவும் இன்று இலப்பைகுடிகாட்டை சேர்ந்த கமால் பாட்சா மற்றும் அப்துல் ரஹீம் ஆகியோர்களுக்கு இடம் விற்பனை செய்ததை பதிவு செய்ய வந்ததாகவும் பதிவு பத்திர பதிவு முடித்துவிட்டு பதிவு பத்திரம் திரும்ப பெறுவதற்கு காத்திருந்ததாகவும் கூறினார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை மேல் பாக்கெட்டில் ரூ.20,500/-ம், அவரது பேண்ட் பாக்கெட்டில் Money purse-ல் ரூ.5,790/- இருந்தது. அது பற்றி கேட்டதற்கு Purse-ல் இருந்த பணம் தனது சொந்த பணம் என்றும் சட்டை பாக்கெட்டிலிருந்த பணம் பற்றி கேட்டதற்கு அவர் முன்னுக்கு பின் முரணாக காரணம் கூறியவரை தீவிர விசாரணைக்கு பிறகு மேலே குறிப்பிட்டுள்ள ரூ.20,500/- அன்றைய அலுவலக செலவிற்காக சார்பதிவாளரிடம் கொடுக்க வைத்திருந்ததாக கூறியதால் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. எனவே அவரது சொந்த பணம் என்று கூறிய அவரது பேண்ட் பாக்கெட்டில் பர்சில் இருந்த பணம் ரூ.5,790/- அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேலே சொன்ன ராஜ்குமார் என்பவரிடம் அவர் மாலை சுமார் 04.30 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள ஒரு பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு அருகில் அவர் வேறு மூன்று நபர்களுடன் நின்றிருந்த போது அவர் தனது கையால் கத்தையாக நோட்டுக்களை எண்ணி பார்த்துவிட்டு அதை சார்பதிவாளர் அலுவலக காம்பவுண்ட் சுவர் ஓரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN-46-Y-1531 Maruti Ertiga Car-ல் வைத்ததை பற்றி விசாரித்த போது அவர் அந்த வாகனம் தன்னுடையதுதான் என்றும்

தாங்கள் அனுமதித்தால் மேற்படி பணத்தை காரிலிருந்து எடுத்து வந்து ஆஜர் செய்வதாக தெரிவித்தன் பேரில் நான் ஒத்துக்கொண்ட பிறகு திரு.ராஜ்குமார் தன்னுடைய காரின் Dash Board-லிருந்து எடுத்து வந்து ஆஜர் செய்த இரண்டு கத்தைகளாக இருந்த பணத்தில் எவ்வளவு உள்ளது என்று கேட்டதற்கு அவர் தக்க பதில் அளிக்கவில்லை. எனவே நான் அதை எண்ணி பார்க்க அதில் ஒரு கத்தையில் ரூ.2000x27=ரூ.54,000/- மற்றொரு கத்தையில் ரூ.500x91=ரூ.45,500/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரித்த போது அதற்கும் அவரால் சரியான முகாந்திரம் கூற முடியவில்லை. மேலும் அந்த பணத்தை எதற்காக காரில் வைத்துவிட்டு வந்தீர்கள் என்று கேட்டதற்கு ராஜ்குமார் என்பவர் மேற்கண்ட இரண்டு கத்தையில் உள்ள பணமும் 30.09.2021-ஆம் தேதி அவர் பதிவு செய்த இரண்டு பத்திரங்களுக்காக சார்பதிவாளர் அவர்களுக்கு, அவர் அலுவலகம் முடித்து செல்லும் போது அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொடுக்க இருந்த பணம் என்று கூறியதை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் திரு.ராஜ்குமார் இன்று பத்திர பதிவு செய்ததாக கூறிய கமால் பாட்சா மற்றும் அப்துல் ரஹீம் ஆகியோருக்கு இடத்தை விற்பனை செய்த நபரை பற்றி சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் அந்த இடத்தை விற்பனை செய்த நபர் ரங்கசாமி ரெட்டியார் என்று தெரிய வந்ததாலும் எனவே ராஜ்குமார் என்பவர் இடைத்தரகராக செயல்பட்டு பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட சட்டபடியான கட்டணத்திற்கு மேல் பணம் வசூல் செய்து அதனை சார்பதிவாளருக்கு கையூட்டாக கொடுத்து வருவது தெரியவந்தது. மேலும் அவர் எடுத்து வந்திருந்த கருப்பு நிற பையை சோதனை செய்த போது அதில் செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள் 2292/2021 நாள் 29.07.2021, 2315/2021 நாள் 30.07.2021, 2429/2021 நாள் 11.08.2021, 2579/2021 நாள் 23.08.2021 மற்றும் 2318/2021 நாள் 13.09.2021 ஆகிய அசல் ஆவணங்களும் அத்துடன் அதன் மூல ஆவணங்களும் இருந்தது. அது பற்றி விசாரித்த போது அவைகள் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு கொடுப்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது என்றும் கூறியதால் அவை அனைத்தும் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலக பார்வையாளர் அறை மற்றும் சார்பதிவாளர் அலுவலக Hall-ல் நின்று கொண்டிருந்த தனி நபர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர்கள் அனைவரும் இன்று பத்திர பதிவு செய்வதற்கு வந்ததாகவும், பதிவு செய்த பத்திரம் திரும்ப பெறுவதற்காக காத்திருந்ததாகவும், அவர்களிடமிருந்த பணம் பற்றி விசாரித்ததில் பத்திர பதிவிற்கு கொண்டு வந்த பணத்தில் பத்திர எழுத்தரிடம் முத்திரைதாள், பத்திர பதிவு கட்டணம், வில்லங்கம் எடுப்பதற்கான கட்டணம், பத்திர எழுத்துக் கூலி மற்றும் பத்திர பதிவு அலுவலகத்திற்கு அலுவலக செலவிற்கு கொடுத்தது போக மீதமுள்ள பணம் என்று கூறினார்கள். எனவே தனி நபர்களது விளக்கம் ஏற்றுக்கொள்வதாக இருந்ததால் அவர்களிடமிருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலக நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களின் வருகை பதிவேடு 2020-2021 மற்றும் பணியாளர்களின் தன்கையிருப்பு பதிவேடு ஆகிய ஆவணங்கள் திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.09.2021 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பட்டியலில் சார்பதிவாளரின் சான்றொப்பத்துடன் கூடிய C, D, H Account- விபரம் மற்றும் கொடிநாள் நிதி வசூலிக்கப்படவில்லை என தெரிவித்து அவர் அளித்த கடிதம் மேல்நடவடிக்கைக்காக பெறப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம்

நேரடி பண வசூல் எதுவும் உண்டா என்று கேட்டதற்கு அனைத்து பரிமாற்றங்களும் ஆன்லைன் மூலம் மட்டுமே செய்யப்படுவதாக தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனை விபரங்கள் குறித்து செயல்முறை தயார் செய்யப்பட்டு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் திரு.ராஜ்குமார் மூலம் கையூட்டு பெறவிருந்த சார்பதிவாளர் திரு.விஜயன் என்பவர் மீதும் மேலும் முகாந்திரம் கூற இயலாமல் பணம் வைத்திருந்த அலுவலக உதவியாளர் திரு.இளங்கோவன் மற்றும் ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் திரு.ராஜ்குமார் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படியும் அதற்காக 30.09.2021-ல் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை மற்றும் மேற்படி சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,22,500/- மற்றும் ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். இப்படிக்கு தமிழில் ஒப்பம் 01/10/2021 ஆ.கருணாகரன். இன்று 01.10.2021-ஆம் தேதி 13.30 மணிக்கு மேற்படி புகாரை பெற்று நிலைய குற்ற எண் 07/2021 u/s 7, 7A of the Prevention of Corruption Act -1988 (As amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். ஆங்கிலத்தில் ஒப்பம் P.Sulochana, 01/10/2021 காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் துறை, பெரம்பலூர் பிரிவு. வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பியும், நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன்.

01/10/2021
காவல் ஆய்வாளர்.
ஊ.த.க. துறை
பெரம்பலூர் பிரிவு.